

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜூலை 19, 2018 | புரட்சி 17 | முழக்கம் 27 | விலை: ரூ.3.00

## பார்வையற்ற சிந்தனையாளர்களின் சாதனை

# பெரியார் பேச்சு – எழுத்துக்கள் – 86 மணி நேர – ஒலி புத்தகமாகியது




‘விடியல் பதிப்பகம்’, மலிவுப் பதிப்பாக வெளியிட்ட பெரியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளைக் கொண்ட நூல் ‘பெரியார் - இன்றும், என்றும்’. 1000 பக்கங்களைக் கொண்ட இந்த நூலை மலிவுப் பதிப்பாக ரூ.300க்கு ‘விடியல் பதிப்பகம்’ வெளியிட்டது. பல்லாயிரக்கணக்கில் இளைஞர்கள் இந்த நூலை வாங்கினார்கள். இந்த நூலில் பெரியார் கட்டுரைகளை பார்வையற்றோர் அறியும் நோக்கத்தில் ஒலி வடிவில் பதிவேற்றப்பட்டு ஒலிப் புத்தகமாக (குறுவட்டு) கடந்த ஜூலை 14ஆம் தேதி பார்வையற்ற முற்போக்கு சிந்தனையாளர் பேரவை சார்பில் வெளியிடப் பட்டது. 86 மணி நேரம் பெரியார் எழுத்துகள் குரலாக ஒலிக்கிறது. பெண்கள் பலரும் தாமாக ஆர்வத்துடன் முன் வந்து பெரியார் எழுத்துகளை தங்கள் குரலில் பதிவு செய்திருப்பது குறிப்பிடத் தக்கது. சென்னை எத்திராஜ் பெண்கள் கல்லூரி அரங்கில் காலை 10 மணியளவில் நடந்த இந்த நிகழ்வில் பார்வையற்ற தோழர்களோடு 300 கல்லூரி மாணவிகளும் பங்கேற்றனர். கல்லூரி முதல்வரும், துணை முதல்வரும் கலந்து கொண்டனர். ‘ஒலிப்பதிவு குறுவட்டு’வுக்கு ‘ஒலிப் புத்தகம்’ என்று பெயர் சூட்டியிருந்தனர்.

ஒலிப் புத்தகத்தை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட்டு சிறப்புரை யாற்றினார். கல்லூரியின் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் அரங்க மல்லிகா வரவேற்புரை யாற்றினார். பேராசிரியர் முனைவர் முருகானந்தன், ‘பார்வையற்றோர் இணைய நூலகம்’ நிறுவனர் ரவிக்குமார், மாநிலக் கல்லூரி இணை பேராசிரியர் வே. சிவராமன், புதுச்சேரி பிரஞ்சு மய்ய ஆய்வாளர் கண்ணன் ஆகியோர் உரையாற்றினர்.

பார்வையற்றோருக்கான வாசிப்பாளராக தன்னார்வத் தொண்டாற்றி வரும் கோமதி, நூல் உருவாக்கம், அதற்காக எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகளை விளக்கியும், வாசிப்பாளர்களையும் இந்த அரும்பணியில் பங்கேற்ற செயல்பாட்டாளர் களையும் அறிமுகம் செய்து உரையாற்றினார். பெரியாரின் எழுத்துகளை முதன்முதலாகப் படித்த போது இத்தகைய புரட்சிக் கருத்துகளையெல்லாம் பேசிய ஒரு தலைவர் இருந்திருக்கிறாரே என்று வியந்தும் அதிர்ந்தும் போனேன். இந்த சிந்தனைகளை விரிவாகக் கொண்டு செல்ல வில்லையே என்ற கவலை உணர்வை சக தோழர்களிடம் பகிர்ந்து கொண்டேன். குறிப்பாக பெண் விடுதலை, சமுதாயம், ஜாதி, மதம், கடவுள் குறித்து தெரிவித்த கருத்துகள் எனக்கு புதிய வெளிச்சத்தைத் தந்தன. இந்தக் கருத்துகள் ஏற்படுத்திய தாக்கம்தான் எங்கள் குழுவை ஆர்வத்துடன் இப்பணிகளில் ஒப்படைக்கச் செய்து இயங்க வைத்தது. இனி அடுத்து இந்தி, ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளிலும் பெரியாரின் கருத்துகளை குரல் பதிவாக்கிடும் முயற்சிகளைத் தொடங்க நாங்கள் முடிவெடுத்து விட்டோம்” என்ற பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்.

நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார் மாணவி பவ்யா. அவரும் வாசிப்பாளர்களில் ஒருவராகப் பங்கேற்று முழுமையுடன் செயல்பட்டவர். இந்தப் பணிக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கிய அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழக உதவி பேராசிரியர் முனைவர் ப. பூபதி நன்றி கூறினார். இந்த ஒலிப் புத்தகம் வடிவம் பெற முழு பங்காற்றிய பூபதி தனது உரையில், பெரியார் சிந்தனைகள், காலத்தின் தேவையாகியிருப்பதை சுட்டிக் காட்டினார்.

நூலை வெளியிட்டு உரையாற்றிய விடுதலை இராசேந்திரன், “இந்த மகத்தான பணியில் ஈடுபட்ட குழுவினரின் பணி மிகவும் போற்றத்தக்கது. பெரியார் எழுத்து - பேச்சுகள் அச்சு வடிவில் தடையின்றி யார் வேண்டுமானாலும் வெளியிட நீதிமன்றம் வழியாக உரிமையைப் பெற்றுத் தந்த அமைப்பைச் சார்ந்தவன் என்பதால் இந்த நிகழ்வில் பங்கேற்பதில் மிகவும் பெருமிதம் அடைகிறேன். பெரியார் எழுத்தும் பேச்சும் அச்சு வடிவம் கடந்து ஒலிவடிவத்திற்கு வந்திருப்பது நாங்கள் பெரியார் எழுத்துகள் வெளியீட்டுக்கான தடைகளை நீக்குவதற்கு எடுத்த முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியின் நீட்சி” என்று குறிப்பிட்டார். “அதிலும் குறிப்பாக பெரியார் எழுத்துகளின் வாசிப்பாளர்களாக பெருமளவில் பெண்களே தங்கள் குரலைத் தர முன் வந்திருப்பது பெரியார் கொள்கைக்குக் கிடைத்த சிறப்பு” என்று கூறினார்.

“பெரியார் - இன்றும் என்றும்” தொகுப்பில் முதல் கட்டுரையில் முதல் வரியே ஒரு மனிதனுக்கு சுயமரியாதை தான் எல்லாவற்றையும்விட மேலானது என்பதற்கு பெரியார் தந்திருக்கிற ஆழமான விளக்கத்தோடு தொடங்குவதைச் சுட்டிக்காட்டினார். பெரியார் கூறுகிறார்:

“ ‘அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது’ என்று பெரியோர்கள் சொன்னதாகச் சொல்வார்கள். நான் அதை ஒப்புக் கொள்ளாததற்கு நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். ‘கொடுமை; கொடுமை மனிதராகப் பிறப்பது மிகக் கொடுமை’ என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.... மனிதனைத் தவிர மற்ற ஜீவகோடிகள் (உயிரினங்கள்) எவ்வளவோ சந்தோஷத்துடனும் அடிமை உணர்வில்லாம லும் சுதந்திரமாய் வாழ்வதை நாம் பார்க்கிறோம். அவைகளில் சிலவற்றிற்குக் கஷ்டமும், அன்னியரால் கஷ்டப்படத்தக்க நிலைமையும் ஏற்பட்டு இருந்தாலும், **மனிதனைப்போல் உணர்ந்து துக்கிக்கிற (அனுபவிக்கக்கூடிய) சக்தியாகிய**

(4ஆம் பக்கம்)



**குரல் கொடுத்தவர்கள்**

பவ்யா குமரேசன், ரவிக்குமார், எப்சி கிளாரா, கௌரி ஷைலேந்திரா, விஜிபாரதி, பிரியங்கா சேகரன், சார்வி, இன்பா சுப்ரமணியம், உமா ஜெயச்சந்திரன், லக்ஷ்மி, ஜெமீமா, சத்தியாதேவி, கோமதி குப்புசாமி

# “தி.வி.க. பெரியார் செயலி” அறிமுகம் : திருப்பூரில் கழகம் எடுத்த காமராசர் பிறந்த நாள் விழா







திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் காமராசர் 116ஆவது பிறந்த நாள் விழா, ஜூலை 15, 2018 அன்று திருப்பூர் இராயபுரம் திருவள்ளுவர் வீதியில் சிறப்புடன் நடந்தது. காலை முதல் பகுதி வாழ் இளைஞர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. மாலைப் பொதுக் கூட்டம், ‘நிமிர்வு’ கலைக் குழுவின் பறை இசை நிகழ்வோடு தொடங்கியது. 20க்கும் மேற்பட்ட பெண், ஆண் கலைஞர்கள் பறை வரலாற்று விளக்கங்களோடு பறையிசை நிகழ்வை நடத்தியது, மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

க. கருணாநிதி தலைமையில் சு. நீதியரசன் வரவேற்புரை யோடு பொதுக் கூட்டம் தொடங்கியது. செல்லதுரை (தே.மு.தி.க.), இராமகிருஷ்ணன், ஆசிரியர் சிவகாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் உரைகளைத் தொடர்ந்து விடுதலை இராசேந்திரன், கொளத்தூர் மணி உரை யாற்றினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பகுதித் தோழர்கள் சரவணன் (தி.மு.க.), சரவணன் (ம.தி.மு.க.), சாமிநாதன் ஆகியோர் நிகழ்ச்சிக்கு பேருதவி புரிந்தனர்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் செய்திகளை புதிய தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக அனைவரையும் சென்றடைய இணையதளம் dvkperiyar.com மற்றும் முகநூல் பக்கம் facebook.com/dvk12 ஆகியவற்றோடு புதியதாக செயலி DVK Periyar என்ற பெயரில் திருப்பூர் கல்விவள்ளல் காமராசர் பிறந்தநாள் விழாவில் அறிமுகப்படுத்தப்பட்டது

கழகத் தலைவர் வெளியிட்டு கழகப் பொதுச் செயலாளர் பெற்றுக்கொண்டார். இதை கூகுள் ப்ளே ஸ்டோரில் தரவிறக்கிக் கொள்ளலாம்.

ஆண்ட்ராய்ட் கைபேசிகளில் இயங்கும் இந்த செயலி (Application) தி.வி.க.வின் செய்திகளை உடனுக்குடன் அறியும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கழக இணையப் பொறுப்பாளர் விஜயக்குமார், சொந்த முயற்சியில் இதை உருவாக்கியுள்ளார்.

## அடுக்கடுக்கான முறைகேடுகள் : நீட் தேர்வு பாடங்களில் 0, -1 மதிப்பெண்கள் பெற்று மருத்துவராகும் மாணவர்கள்

நீட் தேர்வில் இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்களில் 0, -1 போன்ற மதிப்பெண்களை பெற்றிருந்த போதும் அவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயின்று வருகின்றனர்.

மருத்துவ படிப்பில் சேர்வதற்கு நீட் நுழைவுத் தேர்வை மத்திய அரசு கட்டாயமாக்கியுள்ளது. மொத்தமாக 720 மதிப்பெண்களுக்கு இத்தேர்வு நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வினாக்களுக்கும் தலா 4 மதிப்பெண்கள் என மொத்தம் 180 கேள்விகள் கேட்கப்படுகிறது. இயற்பியல், வேதியல், உயிரியல் போன்ற பாடங்களில் இருந்து தான் கேள்விகள் கேட்கப்படுகின்றன. நீட் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான தகுதி மதிப்பெண்ணை ஒவ்வொரு ஆண்டும் தேர்வை நடத்தும் சிபிஎஸ்இ முடிவு செய்கிறது.

இந்நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நீட் தேர்வில் இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்களில் 0, -1 மதிப்பெண்களை பெற்றிருந்த மாணவர்கள் கூட பணம் கொடுத்து தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவம் பயின்று வருகின்றனர். தகுதி மதிப்பெண்களை பெற்றிருந்தால் போதும், தனித்தனியாக பாட வாரியாக தேர்ச்சி பெற வேண்டியதில்லை என்ற காரணத்தினால் அவர்களுக்கு தனியார் கல்லூரியில் சீட் கிடைத்துள்ளது.

முதல் முறையாக நீட் அறிவிப்பு வெளியான நேரத்தில் குறைந்தபட்சம் நீட்தேர்வின் ஒவ்வாரு தாளிலும் மாணவர்கள் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றால் தான் தேர்ச்சி என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அடுத்தடுத்து வெளியான அறிவிப்புகளில் பாடவாரியான தேர்ச்சி பற்றி பேசப்படவில்லை. மொத்தமாக குறிப்பிட்ட சதவீத மதிப்பெண்கள் பெற்றால் போதும் தேர்ச்சி என அறிவிப்பாணை வெளியானது. இந்நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு நீட் தேர்வில் 150-க்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்று தற்போது மருத்துவம் படித்து வரும் பலரும் வேதியியல், இயற்பியல் போன்ற பாடங்களில் பூஜ்யத்திற்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்றது தெரியவந்துள்ளது.

இயற்பியலில் -2 மதிப்பெண்கள், வேதியியலில் 0 மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் உயிரியல் பாடத்தில் 131 மதிப்பெண்கள் பெற்றதால், மொத்தமான தகுதி மதிப்பெண்கள் அடிப்படையில் அவர்கள் நீட் தேர்வில் தகுதி பெற்றவர்களாக கருதப்படுவர். இப்படிப்பட்ட மாணவர்கள் தனியார் கல்லூரியில் பல லட்சம் கொடுத்து மருத்துவம் படித்து வருகின்றனர். நீட் தேர்வில் பாஸ் மதிப்பெண்கள் பெற்றால் போதும், ஒரு சில பாடத்தில் மிக மோசமான மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் கூட, பணம் இருந்தால் தனியார் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்துவிடுகின்றனர். பெரும்பாலான இத்தகைய மாணவர்கள் நிகர்நிலை பல்கலைக்கழகங்களிலே பயில்கின்றனர். இத்தகைய மாணவர்களுக்கு அத்தகைய நிகர்நிலை பல்கலைக்கழகங்களே எம்.பி.பி.எஸ். இறுதித் தேர்வையும் நடத்துகின்றன. இவர்கள் இத்தகைய தேர்வில் தேர்ச்சி பெற்றால் போதும், பயிற்சி மருத்துவராக பணி செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

# சிறு, குறு தொழில்களை நசுக்கிய ‘ஜிஎஸ்டி’ வரி

மோடியால் புதியதாக பிரசவிக்கப்பட்ட ஜி.எஸ்.டி.யால் இன்று தமிழகத்தில் சுமார் 50 ஆயிரம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் மூடப்பட்டு 5 லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர்.

இதற்கு முக்கிய காரணம் பெரும்பாலான பொருட்களுக்கு 18% முதல் 28% வரி விதித்ததாகும், இதனால் தொழில் உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்தது. இதனால் சிறு, குறு தொழில் நிறுவனங்கள் கடும் சிரமத்தை சந்தித்து வருகின்றன. தொழில் நகரமான கோவையில், சிறு, குறு தொழில்களை நடத்திவந்த முதலாளிகள், தொழிற்சாலைகளை மூடி வேலையில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். 20 பேருக்கு மேல் வேலையில் அமர்த்தி நிறுவனம் நடத்தி வந்த கிருஷ்ணகுமார் என்பவர் தற்போது சாலை ஓரத்தில் இட்லி விற்று கொண்டு இருக்கிறார். இதே போல் எஞ்சினியரிங் கம்பெனி வைத்து நடத்தி வந்த பாண்டியன் என்பவர், தற்போது ஒரு எஞ்சினியரிங் கம்பெனியில் எந்திரத்தை இயக்கும் கூலித்தொழிலாளியாக தனது வாழ்க்கையை நகர்த்தி வருகிறார்.

ஜி.எஸ்.டி-யால் தொழில் முதலீடு பெருகும் என கூறப்பட்ட நிலையில், 2017-18ஆம் நிதியாண்டில் தொழில் முதலீடு ரூ. 11 ஆயிரம் கோடி குறைந்துள்ளதாக தமிழ்நாடு அரசு கொள்கை விளக்க குறிப்பில் தெரிவித்துள்ளது. மேலும் ஜி.எஸ்.டி-யால் தமிழகத்திற்கு வரி வருவாய் குறைத்துள்ளதாகவும், தமிழகத்திற்கு தான் மத்திய அரசின் நிதி மிக குறைவாக கிடைக்கிறது என நிதித்துறை செயலாளர் கூறியுள்ளார். வரி வருவாய் குறைந்ததால் தமிழக நிதி நிலையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கடந்த ஜனவரியில் சட்டசபையில் தெரிவித்தார்.

ஜிஎஸ்டி வரிவிதிப்பால் பொருட்களின் விலை குறையும், மக்கள் பயன் பெறுவார்கள் என்று பாஜக தலைவர்கள் தினமும் அறிக்கை விட்டு வந்தனர். ஆனால் இன்று ஒரு வருடம் முடித்த நிலையில் பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளது. அதில் சில ஒரு சில பொருட்களின் வரி குறைப்பால், விலை குறையவில்லை.

உதாரணமாக ஜிஎஸ்டிக்கு முன்பு சிமெண்ட் வரி சுமார் 40%, ஜிஎஸ்டிக்கு பின்பு 28% ஆனால் இன்று வரை சிமெண்ட்டின் விலை குறையவில்லை. இதன் மூலம் முழுக்க முழுக்க கார்ப்பரேட்களின் கொள்ளை லாபம் ஈட்டவே ஜிஎஸ்டி என்பது நிரூபணமாகி வருகிறது. சிறு, குறு தொழிற்சாலைகள் பயன்படுத்தும் மூல பொருட்களின் வரி 5% இருந்து 18% உயர்த்தியதால் மூலப்பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. மேலும் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு 18% ஜிஎஸ்டி வரி கட்ட வேண்டும். இதனால், பொருட்களை சந்தை செய்ய முடியாத நிலை உள்ளது. குறிப்பாக மோட்டார் பம்ப் தயாரிப்பதில் தமிழகம் தான் முதலிடத்தில் இருந்தது. இப்போது, குஜராத்தில் மோட்டார் பம்பு தயாரித்து மிக குறைந்த விலையில் சந்தைப்படுத்துகின்றனர். இங்குள்ள நிறுவனங்களால் அவர்களிடம் போட்டி போட முடியவில்லை. தமிழ்நாட்டில் ஜிஎஸ்டிக்கு முன்பு அதிகபட்ச வரி 14.5% ஆனால் தற்போது 28%. சமீபத்தில் ராஜினாமா செய்த மத்திய அரசின் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியன் ஜிஎஸ்டி அதிகபட்ச 28% வரி என்பதை குறைக்க வேண்டும் என்று தற்போது கூறுகிறார்.

ஜிஎஸ்டி வரி விதிப்பால் கடைசி நுகர்வோருக்கு எந்த பயனும் இல்லை. கடைசி நுகர்வோரின் சட்டைப்பையில் இருக்கும் சிறு தொகையைக்கூட பறித்து கார்ப்பரேட்களுக்கு வழங்குவதே ஜிஎஸ்டியின் பிரதான வேலையாக இருந்து வருகிறது. ஜிஎஸ்டியின் மூலம் மறைமுகவரியே அதிகரித்திருக்

(4ஆம் பக்கம்)

# ஒரே மேடையில் பெரியார்–காமராசர் பங்கேற்ற விழா

***1955ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவர் வரதராஜுலு நாயுடு பிறந்த நாள் விழாவில் பெரியாரும் முதலமைச்சர் காமராசரும் ஒரே மேடையில் பேசினார்கள். தமிழர் சமுதாயத்தின் உரிமைக்கும் விடுதலைக்கும் தன் 'சுயத்தை'யே இழந்து உழைத்தவர் பெரியார் என்பதை வெளிப்படுத்தும் ஆழமான உரையை காமராசர் பிறந்தநாளை யொட்டி 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பதிவு செய்கிறது.***

தலைவர் காமராசர் என்னைப் பற்றிக் குறிப்பிட்டார் அதற்கு எனது நன்றி. திரு. காமராசரிடம் நான்அன்பு கொண்டு, என்னால் ஆன வழிகளில் ஆதரவு கொடுத்து வருகிறேன்.

காரணம், அவர் சில விஷயங்களில் தமிழன் என்கிற உணர்ச்சியோடு ஆட்சி நடத்துகின்றார். அதனால் அவருக்கு, பொறாமை காரணமாகக் காங்கிரஸ் வட்டாரத்திலும், வகுப்பு காரணமாக இரண்டொரு வகுப்பாரிடையிலும் சில எதிரிகள் இருந்துகொண்டு அவருக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள். அத்தொல்லைகள் வெற்றி பெற்றால் தமிழர்களுடைய நிலைமை மோசமாகிவிடும்.

உத்தியோகத் துறையில் தமிழர்களுக்கு மிக மிக கெடுதிகள் ஏற்படலாம் என எண்ணுகிறேன். ஆதலாலேயே அவரது இன உணர்ச்சிக்கு எதிராக இருப்பவர்கள் வெற்றி பெறாமல் இருப்பதற்காக, என்னாலானதைச் செய்து வருகிறேன். அந்த யோசனை அற்றவர்களுக்கு நான் காமராசரை ஆதரித்ததாக ஆகிவிடுகிறது. காமராசர் தமிழ் மக்களிடம் காட்டும் நேர்மையானது, அவர் எனக்கு ஏதோ ஆதரவு காட்டுவதாக ஆகிவிடுகிறது.

நான் அரசியல் தொண்டனல்ல. சமுதாய நலத் தொண்டனாவேன். அதிலும் பெரிதும் தமிழ் மக்கள் நலனுக்கென்றே பாடுபடுபவன். அதை முன்னிட்டு அரசியல் என்பதை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் எதிர்க்கவும் விட்டுக் கொடுக்கவும் துணிவேன். காமராசருக்கும் எனக்கும் அரசியல் கருத்துகளில் எவ்வளவு பேதம் காணப்பட்டாலும், தமிழர் நலத்தை முன்னிட்டு நானாகவே முன்னின்று அவரை ஆதரிக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய மற்றபடி எனது சுயநலத்தை முன்னிட்டோ, அல்லது அவர் விரும்புகிறார் என்று கருதியோ அல்ல. அவரும் என்னுடைய ஆதரவு தேவை என்பதாக என்னிடம் தனிப்பட்ட முறையில் கேட்டதும் கிடையாது.

குடியாத்தம் சட்டசபை தேர்தலில் நான் அவரை ஆதரித்தேன் என்றால், அப்பொழுதும் அவரிடம் சொல்லி விட்டு அவரை ஆதரிக்கவில்லை. அவரும் தன்னை ஆதரிக்க வேண்டும் என்று என்னைக் கேட்கவும் இல்லை.

திடீரென்று எனக்குத் தோன்றிய எண்ணத்தின் பேரில்தான் நான் வலியச் சென்று அவரை ஆதரிக்கும் படியாகியது. நானும் அந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தவனுமல்ல. அவர் விரும்புவார் என்று கருதினவனுமல்ல.

ஒரு நாள் நான் ஆத்தூர் பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் ஒரு தோழர் என்னிடம் ஒரு பத்திரிகையைக் கொடுத்து 'முதல் மந்திரி அவர்கள் சட்டசபை தேர்தலுக்குக் குடியாத்தம் தொகுதியில் நிற்பதாக செய்தி வந்துள்ளது' என்று சொன்னார். நான் அதை வாங்கிப் படித்துப் பார்த்து விட்டு, அதே கூட்டத்திலேயே என்னுடைய எண்ணத்தை வெளியிட்டேன்.

"திரு. காமராசர் அவர்கள் குடியாத்தம் தொகுதியில் தோல்வி அடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும்" என்பதாக அப்போதே கூறி விட்டேன்.

இதற்கு யாருடைய யோசனையையும் சம்மதத்தையும் நான் கேட்கவில்லை. ஏனெனில், நான் ஜனநாயக ரீதியில் தொண்டாற்றுபவன் என்று சொல்லிக் கொள்பவன் அல்ல. நான், ஜனங்கள் உணராததை, கவலைப்படாததை, மற்ற யாரும் செய்ய முற்படாததை, எடுத்துக் காட்டி உணர்த்தி கவலைப் படும்படி செய்து அவர்களை அவசியமான நேர்வழியில் நடக்கச் செய்யவேண்டும் என்கிற தன்மையில் தொண்டாற்றுபவன் என்னுடைய கவலையையும் அனுபவத்தையும் கொண்டு, மக்களுடைய இழிவும் குறைபாடுகளும் நீங்க, மக்களுக்கு வழிகாட்டும் பணியை ஆற்றுகிறவனாவேன்.

இந்தப் பணியை ஆற்ற நம்நாட்டில் ஆள் இல்லை. இது பெரும் தொல்லையும் பொறுப்பும் தன்னல மறுப்பும் கொண்ட பணி. ஆதலால் தக்க அறிவும் திறமையும் உள்ளவர்களும்கூட மறைந்து கொண்டும், பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொண்டும், பொதுத் தொண்டு என்னும் பேரால் வயிறு வளர்க்கவும் பணம் சேர்க்கவும் பதவியும் பெருமையும் பெறவுமே, பொதுத் தொண்டு வேஷம் போட்டுக் கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் இலட்சத்தில் 99,999 பேர்களாகத் தமிழர்களில் காணப்படுகிறார்கள்.



> "நாயக்கர் அடிக்கடி என்னைப் புகழ்ந்து பேச வேண்டாம் என்று சொல்லுங்கள். அதனால் பல பேர்கள் எனக்கு எதிரிகள் ஆகின்றனர் என்று நண்பர் திரு.வி.க.விடம் ஓமந்தூரரார் கூறி அனுப்பினார்."

இக்காலம் பொதுத் தொண்டில் மிகுதியும் நேர்மையற்றதாகிவிட்ட காலம். மக்கள் தன்மையும் அது போன்றதாகி வருகிறது. இந் நிலையில் ஜனநாயகத் தலைமையும் ஜனநாயக மக்களும் எப்படிப் பயனுள்ளதாக இருக்க முடியும்? ஆனதினால்தான் நான் எனக்கு சரி என்று தோன்றுகிறபடி, மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் என்றுகூட கவனிக்காமல் மற்றவர்களையெல்லாம் என்னைப் பின்பற்றச் சொல்கிறேன்.

பின்பற்ற இஷ்டம் இல்லாவிட்டால், விலகிக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறேன்.

இவ்வளவு பெரிய காரியத்திற்கு நான் தகுதியா என்றாலும் எனக்கு இது தவிர வேறு வேலை இல்லாததாலும், வேறு யாரும் இப்பொறுப்பை ஏற்கப் பயப்படுவதாலும் இவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் துணிந்து முன்வந்துள்ளேன். காமராசர் அவர்களையும் நான் அந்தப்படி கருதுவதால் அவர் போக்குக்கு என்னாலான ஆதரவைத் தருவது அவசியம் என்று கருதுகிறேன். அவருக்கு ஆதரவு தருவது பற்றி நான் வெட்கப்படவில்லை. அவரும் என்னைப் போலவே ஒரு துறவி ஆவார். எனக்காவது மனைவி உண்டு. அவருக்கு அதுவும் இல்லை.

இப்படிப்பட்ட துணிச்சலுக்கு மனைவி மக்கள், சொந்த வாழ்வு இல்லாமை அவசியமாகும். இப்படிப்பட்டவர்கள் ஏதாவது தவறு செய்தாலும் செய்யலாம். ஆனாலும் தவறுதான் செய்யலாமே ஒழிய புரட்டு மோசம், சுயநலப் பற்று, வேஷம் செய்ய அவசியமுடையவர்களாக மாட்டார்கள். இயற்கையை முன்னிட்டு நான் இப்படிப் பேசுகிறேன்.

நண்பர் இராஜகோபாலாச்சாரி அவர்கள் முதன்மந்திரியாக ஆன பொழுது இப்பொழுது, காமராஜரை ஆதரிப்பது போலவே அவரையும் ஆதரித்தேன். அப்போது அவருடைய விரோதிகள் என்னைக் குறை கூறினார்கள். நான் இலட்சியம் செய்யவில்லை. ஆனால், ஆச்சாரியாருடைய போக்கு நாளுக்கு நாள் எங்களுக்கு மனவேதனையைக் கொடுக்கும் அளவுக்கு வந்தது.

கடைசியில் அவருடைய கட்சி ஒழிந்துதான் ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வரும் அளவுக்கு அவருடைய ஆட்சி எங்களுக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. எனவே எப்படியோ அவரும் பதவியிலிருந்து விலகினார்.

இதுமட்டுமில்லாமல், திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதல் மந்திரியாக இருந்த காலத்தில்கூட, ரெட்டியார் அவர்களின் முதல் மந்திரி பதவி நீடிக்க வேண்டும் என்று பாடுபட்டவன் நான். அவருக்கு என்னால் முடிந்தவரை, அவர் விருப்பமில்லாமல் ஆதரவு கொடுத்தேன். அவர் எங்கள் கழகத் தலைவர்களைப் பல வழிகளில் கொடுமையாக நடத்தினாலும், அவருடைய ஆட்சியில் தமிழர் உணர்ச்சி இருப்பதாகத் தெரிந்ததாலும் எங்களுக்கு அது மனத்திருப்தியைக் கொடுத்ததாலும் தமிழரின் எதிரிகள் அவருக்குத் தொல்லைக் கொடுத்த காலத்தில், அவருக்கு ஆதரவு கொடுக்கும் நிலை ஏற்பட்டது. அதையும் அப்போது சிலர் வெறுத்தனர். பொறாமைக்காரர்களும் சூழ்ச்சிக் காரர்களும் ஏதோ பேசி ரெட்டியாரைக் கவிழ்த்தார்கள்.

என்னைத் தாடி உள்ள ராமசமி என்றும், அவரைத் தாடி இல்லாத கதராடை ராமசாமி என்றும் கூறினார்கள். அன்றியும் நான் ஆதரித்ததாலேயே அவருக்கு இதனால் பல பேருடைய விரோதமும் கிடைக்கும்படி ஆகி விட்டது. அதனாலேயே அவர் என்னுடைய ஆதரவு, பாராட்டுதல், புகழ்ச்சி இவை தனக்கு இல்லாமல் இருந்தால் நல்லது என்றுகூடச் சொன்னார்.

அதாவது அவர், "நாயக்கர் அடிக்கடி என்னைப் புகழ்ந்து பேச வேண்டாம் என்று சொல்லுங்கள். ஏனெனில், அதனால் பல பேர்கள் எனக்கு எதிரிகள் ஆகின்றனர்" என்று நண்பர் திரு.வி.க. அவர்களிடம் கூறி அனுப்பினார்.

அதைப் போன்றே நான் காமராசரை ஆதரிப்பது பற்றி, பலர் பொறாமை கொள்கிறார்கள். அவருடைய எதிரிகள் இந்தச் சாக்கை வைத்து அவரைக் குறை கூறுகிறார்கள். இன்றைக்குப் பார்ப்பனர்கள் எல்லாம் அவருடைய ஆட்சிக்கு எந்த விதத்திலாவது கேடு உண்டாக்க வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள் என்பதை நாங்கள் உணராதவர்கள் இல்லை. இதை அவரும் உணராமல் இல்லை.

இதைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், குடியாத்தம் தேர்தலில் நடந்த சம்பவங்களை நேரில் பார்த்தவர்களைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

அத்தனை பார்ப்பனர்களும் கட்டுப்பாட்டோடு காமராசரை எதிர்த்தார்கள். அவருக்குத் தோல்வியை விளைவிக்கப் பலவிதத்திலும் முயற்சித்தார்கள். பணக்காரப் பார்ப்பனர்கள் எல்லாம் ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவழித்தும் பார்த்தார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி முற்றிலும் தோல்வியடைந்துவிட்டது.

எனவே, இப்படிப்பட்ட நிலையில் எங்களுடைய கழக முயற்சியை அதிக அளவில் காட்டும் நிலை ஏற்பட்டு, அதற்காக எங்கள் பணத்தையும் செலவழித்து ஆதரித்தோம். இன்றும் அவரது செல்வாக்கைப் பாதிக்கும்படியான தேர்தல் முதலிய காரியங்களில் அவர் விரும்பாமலே எங்களால் ஆனதைச் செய்து வருகிறோம்; செய்யவும் இருக்கிறோம். இதனால் நான்காங்கிரசையே ஆதரிப்பதாக நினைக்க வேண்டாம்.

இதுவரை நான் அவரை எந்தவிதமான உதவியும் கேட்டது கிடையாது. அவரும் என்னை எதுவும் கேட்டது கிடையாது. எங்கள் இருவருக்கும் சொந்த சங்கதி என்பதாக எதுவும் இல்லை. தமிழர் நலத்திற்காக அவர் தன்னாலானதைச் செய்ய வேண்டும் என்று நான் ஆசைப்படுவதுண்டு. தனிப்பட்ட நபர்களைப் பற்றி நான் அவரிடம் எதுவும் பேசுகிறதே இல்லை. இனியும் பேசப் போவதும் இல்லை. நாங்கள் இப்படிப்பட்ட சம்பிரதாய சம்பந்தமில்லாமல் தனிப்பட சந்திப்பதுமில்லை.

இன்றுகூட இந்த விழாவுக்கு என்னை அழைத்தபோது, காமராஜர் இங்கு வருவார் என்று தெரிந்திருந்தால் நான் கண்டிப்பாய் வர ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன். நான் இதுவரை எந்த மந்திரி பேசுகின்ற நிகழ்ச்சி களிலும் கலந்து கொண்டதே இல்லை. அதில் கலந்து கொள்வதில்லை என்பது இதுவரை நான் செய்து கொண்டிருந்த முடிவான கருத்தாகும்.

ஆனால், இதில் மட்டும் கலந்து கொள்ளும் படியான நிலை ஏற்பட்டதானது, நான் இதற்கு வருவதற்கு ஒப்புக் கொண்ட பின்தான் முதல் மந்திரி அவர்கள் இதற்குத் தலைமை வகிக்கிறார் என்றும், சிலர் பேச வந்திருக்கிறார்கள் என்றும் தெரிய வந்தது. இதன் பிறகு நான் மறுத்துக் கூறுவது முறை இல்லை என்பதாகக் கருதி எதிர்பாராத இச்சந்தர்ப்பம் தவிர்க்க முடியாத சூழ்நிலையின் பேரில் அமைந்து விட்டது.

என்றாலும், நண்பர் வரதராஜுலு நாயுடு அவர்கள் பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஏற்பட்ட வாய்ப்பை நான் மிகப் பெருமையாகக் கொள்கிறேன். டாக்டர் நாயுடு அவர்களுக்கு இவ்வாழ்த்தும், பொது மக்கள் பாராட்டுதலும் வெகு நாளைக்கு முன்பாகவே நடந்திருக்க வேண்டிய காரியமாகும். இப்போதாவது நடந்ததில் பொது மக்களே மிகுதியும் பாராட்டுதலுக்குரியவராவார்கள் என்று சொல்லுவேன்.

கடைசியாக தலைவர் அவர்கள் (காமராசர்) என்னிடம் அன்பு காட்டி என்னைப் பற்றிச் சில குறிப்பிட்டதற்காகவும், இவ்விழாக் குழுவினர் எனக்கு இதில் கலந்து கொள்ள வாய்ப்பளித்ததற்காகவும், எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு, டாக்டர் நாயுடு அவர்கள் உட்பட என்னிடம் உள்ள அன்பு என்றும் குறையாதிருக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டு, என்ன மாற்றம் ஏற்பட்டாலும் மனிதத் தன்மை முறையில் ஒருவருக்கொருவர் அன்பும் நாம் தமிழர்கள் என்கிற உணர்ச்சியும் எங்களிடமிருந்து மாறாது என்பதாக உறுதி கூறுகிறேன்.

இங்குக் கூடியுள்ள பொது மக்கள் எனது இச்சிறு சொற்களுக்கு இதுவரை பொறுமையாய் காது கொடுத்ததற்கும் நன்றி செலுத்திக் கொண்டு அமர்கிறேன்.

**27.11.1955 அன்று சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்ற டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவின் பிறந்த நாள் விழாவில் பெரியார் ஆற்றிய உரை – 'விடுதலை' (3.12.1955)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பொள்ளாச்சியில் ஒரு நாள் பெரியாரியல் பயிலரங்கம்

பொள்ளாச்சி பகுதி திராவிடர் விடுதலைக் கழக சார்பில் பொள்ளாச்சி அருகே உள்ள நஞ்சை கவுண்டன்புதூரில் அருள்ஜோதி உணவு விடுதி அரங்கில் ஒரு நாள் பெரியாரியல் பயிலரங்கம் ஜூலை 15, 2018 அன்று நடந்தது. 84 பேர் பயிலரங்கில் பங்கேற்றார்கள். இதில் 10 பேர் பெண்கள். பயிற்சியாளர்கள் அனைவரும் புதிதாக பெரியாரியலை நோக்கி வரும் இளைஞர்கள்.

பயிலரங்கைத் தொடங்கி வைத்து, மூத்த கழகத் தோழர் மடத்துக்குளம் மோகன் உரையாற்றினார்.

தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'திராவிடர் இயக்க வரலாறு' என்ற தலைப்பில் வகுப்பு எடுத்தார். 2 மணி நேரம் வகுப்பு நடந்தது. மதிய உணவைத் தொடர்ந்து கழகப் பொறுப்பாளர் வெள்ளியங்கிரி, 'பயிற்சி முகாம் நோக்கம்' குறித்து விரிவாகப் பேசினார்.

தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'பெரியார்-அம்பேத்கர் சிந்தனைகள்' என்ற தலைப்பில் இரண்டு மணி நேரம் வகுப்பு எடுத்தார். சுல்லிமேடு காடுப் பகுதியிலிருந்து பெரியாரியல் நோக்கி வந்துள்ள பழங்குடி சமூகத்தைச் சார்ந்த மாணவ மாணவிகள் பயிற்சி முகாமில் பங்கேற்று பெரியாரியல் கருத்துகளைக் கேட்டது குறிப்பிடத் தக்கது.

பழங்குடி மாணவிகள், பெரியார் குறித்த பாடல்களைச் சிறப்பாகப் பாடினர். பயிற்சி முகாம் நடைபெறுவதற்கு உந்து சக்தியாக இருந்து தனது துணைவரின் பழங்குடிச் சமுதாயத்தினரிடம் பெரியாரியலைப் பரப்பி வரும் வினோதினி நன்றி கூறினார்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, மூத்த கழகத் தோழர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் நிகழ்வில் பங்கேற்றனர். பொள்ளாச்சி பகுதி கழகத் தோழர்கள் ஒரு நாள் பயிற்சி முகாம்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். மூன்று மாதத்துக்கு ஒரு முறை இந்தப் பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்படும் என்று மடத்துக்குளம் மோகன் நிகழ்வில் அறிவித்தார். முகாம் மிகுந்த பயன் தந்ததாக பயிற்சியாளர்கள் பலரும் கூறினர்.



– நமது செய்தியாளர்

## மணவிழா நாள் மகிழ்வாக பெரியாரியல் பயிலரங்கம் நடத்திய இணையர்கள்

திருப்பூர் – கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் உடுமலை திருமூர்த்தி மலை படகுத் துறையில், 2017 ஜூன் 11, 12 தேதிகளில் நடத்திய பெரியார் பயிலரங்கில் வினோதினி – மணி ஆகியோர் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டனர். முதலாம் ஆண்டு மணவிழாவின் மகிழ்ச்சியாக பெரியாரியல் பயிலரங்கை நடத்த விரும்பி அதற்கு நிதி உதவி அளிக்க வினோதினி முன் வந்தார். ஏற்கனவே ஜாதி மறுப்பு திருமணம்செய்து கொண்ட கோவை கழக இணையர்கள் நிர்மல் – இசைமதி மணவிழா நாளும் ஏறத்தாழ இதை ஒட்டியே வருவதால் தோழர் நிர்மல், பயிலரங்கத்துக்கு தங்கள் மணவிழா மகிழ்வாக நிதி உதவி செய்ய முன் வந்தார். உடனே பயிலரங்கம் ஏற்பாடானது. பொள்ளாச்சி கழகத் தோழர் வெள்ளியங்கிரி இத் தகவலை பலத்த கரவொலிக்கிடையே பயிலரங்கில் அறிவித்தார். கழகத் தோழர் கோவை நிர்மல், "இனி ஒவ்வொரு ஆண்டும் மணவிழா நாளில் இத்தகைய பயிலரங்கை வினோத்-மணி இணையருடன் இணைந்து நடத்துவோம்" என்று அறிவித்தார்.

தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில், "இப்படி குடும்ப நிகழ்வுகளுக்காக செலவிடும் பணத்தை பயிலரங்குகளுக்காக செலவிட முன் வருவது தோழர்கள் பின்பற்றத்தக்க ஒரு சிறந்த திட்டமாகும். பாராட்டுகிறோம். தோழர்கள் இந்த முறையைப் பின்பற்ற வேண்டும். நான் கூட எனது மகள் திருமணத்துக்காக செலவிட வேண்டியதை, திருமணத்துக்கு செலவிடாமல் 100 தோழர்களுக்கு அய்ந்து நாள் பெரியாரியல் பயிற்சி முகாமாக கொளத்தூரில் நடத்தினேன். பயிற்சி முகாம் நிறைவு விழா பொதுக் கூட்ட மேடையில் மகளின் திருமணத்தை நடத்தினோம்" என்று குறிப்பிட்டார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

**கொடுமை அவற்றிற்கு இல்லை.** ஏனெனில் பகுத்தறிவு என்கிற ஒரு உபத்திரவம் கொடுக்கத்தக்க குணம், அவைகளுக்கு இல்லாததால்தான். உதாரணமாக குதிரைகளை ஜட்கா வண்டியில் பூட்டி, ஒரு முரட்டு நூல் கயிற்றை மடித்துக் கொண்டு ஓட ஓட, அதன் மிக மெல்லியதும் அதிக உபத்திரவம் கொடுக்கத்தக்க இடமுமாகிய மர்ம ஸ்தானத்தில் அடித்தாலும்... அவைகளுக்கு கஷ்டம் மாத்திரம் தோன்றுமேயல்லாது, அதற்குத்தான் பிறப்புரிமை இழந்து இப்படி கஷ்டம் அனுபவிக்கிறோமே என்கிற உணர்ச்சி இருக்காது. தவிர அதற்கு மான அவமானம் என்ற உணர்ச்சி இல்லை. இதோடு நாளைக்கு வேண்டுமே என்கிற கவலையும் இல்லை. எவ்வளவு கிடைத்தாலும் போதும் என்கிற ஆசை என்னும் அடிமைத்தன்மையும் உடைத்தாயிருப்பதால், மனிதத் தன்மையானது பிறவியிலேயே மிகுதியும் இழிவானதும் அடிமைத்தன்மை கொண்டதுமாய் இருக்கிறது என்பது நான் கொண்ட கருத்து.

இப்படிப்பட்ட மனித ஜீவனுக்கு எல்லாவற்றையும்விட முக்கியமான உணர்ச்சியாக, மான-அவமானம் என்னும் தன்மானமாகிய சுயமரியாதையைத்தான் பிறப்புரிமையாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் 'மனிதன்', 'மானுடன்' என்ற பதங்கள் (சொற்கள்) மானத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட மொழிகள். ஆதலின் மனிதன் என்பவன் மானமுடையோன். **மனிதனுக்கு மனிதத் தன்மையைக் காட்டும் உரிமை உடையது மானம்தான். அத்தன்மையாகிய சுயமரியாதையைத்தான் மனிதன் சுயமரியாதையாகக் கொண்டிருக்கிறான்"** என்ற ஆழமான பெரியார் தந்த சுயமரியாதைக்கான விளக்கத்தை எடுத்துக் காட்டினார். ('குடிஅரசு' 9.10.27)

தொடர்ந்து பெண்கள் மீது வரலாற்று ரீதியாக மதம் திணித்த கொடுமைகள், பெரியார் - பெண்ணுரிமை என்ற எல்லையைக் கடந்து பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்த சிந்தனைகளை சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

– நமது செய்தியாளர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. மறைமுக வரி அதிகரிக்கும் போது, அது எந்த விதத்திலும் நுகர்வோருக்கு பயன் அளிக்காது. மாறாக நுகர்வோரை ஒட்டசுரண்டவே செய்யும். ஒரு வளமான பொருளாதார வருமான மறுபகிர்வுக்கு எப்போதும் நேர்முக வரிகளைத்தான் அதிகம் பயன்படுத்த வேண்டும். மாறாக ஏழை, பணக்காரர் என எல்லோருக்கும் ஒரே விதமான மறைமுக வரிகளை அதிகரிக்கும்போது அது சமூகத்தில் மிகப் பெரிய ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தும். அந்த வேலையைத்தான் தற்போது ஜி.எஸ்.டி. மிகத் தெளிவாக செய்து வருகிறது. இந்தியாவில் 2017ஆம் ஆண்டு உருவான ஒட்டுமொத்த சொத்துக்களில் 73 சதவிகிதத்தை ஒரு சதவிகித பெரும் கார்ப்பரேட் முதலாளிகளின் கையில் சென்று சேர்ந்திருக்கிறது என்கிறது ஆக்ஸ்ஃபாம் அறிக்கை. இதனை உறுதிபடுத்தும் வகையில் ஜிஎஸ்டி அமலாக்கத்தால் சிறு, குறு தொழில்கள் அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கும் இதே வேளையில் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களின் வளர்ச்சி அதிகரித்து வருகிறது. ஆக மோடி அறிவித்த ஜிஎஸ்டி அறிவிப்பால் பிறந்திருக்கும் புதிய இந்தியா என்பதும் வளர்ச்சி என்பதும் சாதாரண மக்களுக்கானது அல்ல. மாறாக கார்ப்பரேட்களுக்கானது.

## தலித் சிறுமி தொட்ட மதிய உணவை நாய்க்குக் கொட்டிய ஜாதி வெறியர்கள்

பள்ளியில் சமைத்த மதிய உணவை தலித் மாணவி தொட்டு விட்டதாகக் கூறி அதனை நாய்க்குக் கொட்டிய அராஜகம் நடந்துள்ளது. இராஜஸ்தான் மாநிலம் உதய்பூர் கிராமத்திலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இங்குள்ள அரசுப் பெண்கள் ஆரம்பப் பள்ளியில் மாணவர்களுக்கு வழங்குவதற்காக மதிய உணவாக ரொட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. கமலா வைஷ்ணவ் என்ற பெண் உதவியாளர் இந்த உணவை சமைத்துள்ளார். இந்நிலையில், உணவை வாங்கும்போது ரொட்டி இருந்த பாத்திரத்தை தலித் மாணவி ஒருவர் தொட்டுவிட்டதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த உதவியாளர் கமலா வைஷ்ணவ், தலித் மாணவியை மிக மோசமான முறையில் திட்டி அவமானப்படுத்தியதுடன், தலித் மாணவி தொட்ட உணவு தீட்டுப்பட்டு விட்டதாகக் கூறி, உணவு முழுவதையும் நாய்க்குக் கொட்டியுள்ளார்.

பள்ளி உதவியாளரின் இந்த தீண்டாமையால் தலித் மாணவி மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார். ஆனால், அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இதனிடையே, மதிய உணவை நாய்க்கு கொட்டப்பட்டதை வீடியோ எடுத்திருந்த ஒருவர், அதனை சமூகவலைத்தளங்களில் பதிவேற்றியதால், தலித் சிறுமிக்கு நேர்ந்த கொடுமை வெளியுலகுக்கு தெரியவந்துள்ளது. அதன்பிறகே கல்வித்துறை அதிகாரிகளும் இப்பிரச்சனையில் தலையிட்டுள்ளனர். தீண்டாமையைக் கடைப்பிடித்த உதவியாளரை தற்போது இடை நீக்கம் செய்துள்ளனர்.

### விவாகரத்துப் பெற்றவருக்கு மணமகன் தேவை

கல்வித் தகுதி : எம்.ஏ., எம்.பில்.,

பணி : 'டியுசன் சென்டர்'. சட்டப்படி விவாகரத்துப் பெற்றவர்.

ஒரு மகள். திருமணம் முடிந்து விட்டது.

இடம் : திருச்சி.

எதிர்பார்ப்பு : பெரியார் கொள்கையுடையவர்.

குறிப்பு : கல்வி தகுதி முக்கியமல்ல.

வயது : பெண் - 48

தொடர்புக்கு : 8110969860

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
9841489896
newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 19th July 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN